**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 7/2020**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.11.2025 | | |
| பெயர்: | பிரபாகரன்<br>(PW–2 Cross ) | தகப்பனார் பெயர்: | ராமலிங்கம் |
| கிராமம்: | திருப்பன்கூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 38/2025 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :12.11.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.45 )**

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் மகராஜன் என்னிடம் நிலத்தை விற்றார். அது வாதியின் பெயரில் ஆர்.டி.ஆர்–ல் இருந்தது. வாதி நிலத்தை பிரதிவாதி ஏமாற்றி விட்டார் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் 1–ம் பிரதிவாதியிடமிருந்து சொத்து வாங்கியது சம்பந்தமான ஆவணம் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் முத்து என்பவர் மகராஜன் என்பவரிடமிருந்து வாங்கியுள்ளார் என்று கூறியுள்ளேன். நான் வாங்கியிருக்கிறேன் என்று கூறினால் தவறு என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு ஒரு அயிட்ட சொத்திற்கு மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் என்பது 36, Sub Division எனக்கு ஞாபகமில்லை. 30.01.2018–ம் தேதியிட்ட வருவாய் துறை நீதிமன்ற ஆணை மூலமாக குத்தகை பாக்கி செலுத்தாததால் தாவா சொத்திலிருந்து மொத்த பிரதிவாதிகளையும் வெளியேற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் யாரையும் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தவில்லை. வெளியேறுவதற்கான

உத்தரவு போடப்பட்ட விவரம் எனக்கு தெரியும். வருவாய் துறை நீதிமன்ற ஆணைக்கு பிறகு 1–ம் பிரதிவாதி தனது சொந்த செலவில் ரூ. 44,441/– யை கோயிலுக்கு குத்தகை பாக்கி செலுத்தி தனது அனுபவத்தில் வைத்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.55)**